# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 57 — 1973 අප්‍රේල් 27 වැනි සිකුරාදා — 1973.04.27

57 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 407 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 410 |


## பதவிகள்—வெற்றிடம்

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்*

*1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பது அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்குவிதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிக்களுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழித்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அரசசேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவிபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.*

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுங்குவோர் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.*

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள் அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

---

**முக்கிய அறிவித்தல்**

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.*

*குறிப்பு.*—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

**5. வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

**6. யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும்; தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. *பிற* **தேவைகள்.**—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேடமுயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. *தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.*—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

**சிவில் வான்செலவுத் திணைக்களம்**

*உதவி வானூர்திப் பரிசோதகர் பதவி—தரம் I (வானொலி)*

சிவில் வான்செலவுத் திணைக்களத்தின் உதவி வானூர்திப் பரிசோதகர் பதவி தரம் I (வானொலி)க்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு "செயலாளர்", போக்குவரத்து அமைச்சு, கொழும்பு 1, என்ற முகவரிக்கு பின்வரும் திகதிகளிலன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உதவி வானூர்திப் பரிசோதகர் பதவி தரம் I—(வானொலி)" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 1973.6.14.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1973.6.30.

**குறிப்புக்கள்.**—(1) விண்ணப்பப் படிவமோ அன்றி அத்தகைய படிவம் தொடர்பான கடிதமோ தபாலில் தொலைந்து விட்டது அல்லது தவறிவிட்டது எனும் எவ்விதக் கூற்றுக்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதிவரை காத்திருப்பவர்கள் அதனால் வரும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(2) வெளிநாட்டு விண்ணப்பதாரர் விரும்பினால், அந்நாட்டிலுள்ள அல்லது தாம் வதியும் நாட்டுக்கண்மையில் இருக்கும் நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்தில், போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு அனுப்புமாறு குறிப்பிட்ட தேதிக்குமுன் விண்ணப்பப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

(3) *மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.*—இலங்கைக் குடியரசின் கீழ் நியமனம் பெற வெளிநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் இலங்கையரான உத்தியோகத்தர், சேவைக்கு உடற்றகுதி உடையவரென்பதை உறுதிப்படுத்தற் பொருட்டு தம்மை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழில் செய்வோரால் சோதிக்கப்படுதற்கு உடன்படுமாறு வேண்டப்படுவர். இத்தகைய சோதனைக்கான கட்டணமும் இலங்கைக்கு வருவதற்கு ஏற்படும் பிரயாணச் செலவும் உத்தியோகத்தராலேயே செலுத்தப்படல் வேண்டும்.

**2. வேலையிலமர்த்தல் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் மூன்று வருட தகுதிகாண் கால எல்லைக்குட்படுத்தப்படுவர்.

குறிப்பு :—(1) 1971.12.31 ஆந் தேதியன்று அரசாங்கத்தின் கீழ் ஓய்வூதியத்திற்குரிய பதவியை வகிக்கும் நபர் ஒருவர் நியமனம் செய்யப்படின் தொடர்ந்தும் புதிய பதவியில் ஓய்வூதிய உரிமைகளுக்கு அவர் உரித்துடையவராவர்.

(2) தெரிவு செய்யப்பட்ட நபர் அரசாங்க சேவையாளராக நிரந்தரமான ஓய்வூதியத்திற்குரிய பதவியை வகிப்பவரெனின், குறிக்கப்பட்டதொரு கால எல்லைக்கு புதிய பதவியில் பதிற் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்படுவார்.

3. வேதனமும் படிகளும்.—இப்பதவிக்கான சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

*திரட்டிய சம்பளம்.*—ஆண்டொன்றுக்கு ரூபா 7,800—ஏற்றங்கள்—ரூபா 8,800 வரை ஆண்டொன்றுக்கு ரூபா 360 கொண்ட மூன்று வேதன ஏற்றங்கள் உடையது. அதன் பின்னர் திறமைகாண்தடைப் பரீட்சையில் உத்தியோகத்தர் சித்தியடையும் பட்சத்தில் பின்வரும் சம்பள அளவுத் திட்டத்திற்குரியவராவர். ஆண்டொன்றுக்கு ரூபா 9,600—ஏற்றங்கள்—ரூபா 13,440 வரை ஆண்டொன்றிற்கு ரூபா 480 கொண்ட 5 வேதன ஏற்றங்கள்.

1969.10.1 க்கு முன்னர் அடிப்படை சம்பள அளவுத் திட்டம் : ரூபா 5,160—3 × 360—6,240/6,960—4 × 360, 5 × 480—ரூபா 10,800.

4. **வேண்டப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகர்களும் பின்வரும் தகைமைகளையுடையவரென்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த ஒழுக்கமுடையவராயும் உடல் நலம் உடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1973.6.30 ஆந் திகதியன்று 25 வயதிற்குக் குறையாதவராயும் 40 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். இவ்வயதெல்லை ஏலவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு ஏற்புடையதாகாது.

(இ) க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமற் தோற்றி சிங்களம்/தமிழ், கணிதம், பௌதிகம் ஆகிய பாடங்கள் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ; அல்லது

சி. பா. த. பரீட்சையில் கணிதம், பௌதிகம் ஆகிய பாடங்கள் உட்பட சித்தியடைந்திருத்தல் வேண்டும்; அல்லது இதற்குச் சமமான அல்லது உயர்தரப் பரீட்சை ; அத்துடன்

(ஈ) இலத்திரனியல், வானொலிப் பொறியியலாளர் தாபனத்தின் (லண்டன்) பட்டதாரி அங்கத்துவப் பரீட்சையில்

பாகங்கள் 1, 2, 3, 4, 5 ஆகியனவற்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்; அல்லது

மின் எந்திரவியல், பொறியியலாளர் தாபனத்தின் (லண்டன்) பட்டதாரி அங்கத்துவப் பரீட்சையில் பாகங்கள் 1, 2, 3 ஆகியனவற்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்; அல்லது

றேயல் வான்செலவுச் சங்கத்தின் (லண்டன்) அசோசியேட் கூட்டிணைவுப் பரீட்சையில் "வானொலிப் பொறியியல்" ஓர் பாடமாக பாகங்கள் 1, 2 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்; அல்லது

இதற்குச் சமமான, அங்கீகரிக்கப்பட்ட வானொலி இலத்திரனியல் பொறியியலாளர் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட தகைமை.

அனுபவம்.—வானொலித் தொடர்பு உபகரணத்தின் பழுதுபார்த்தலிலும் முழுத்தேய்வாவிலும் குறைந்தது 5 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்; அல்லது

தள வானொலித் தொடர்பு உபகரணத்தினைப் பழுதுபார்த்தல் வி. ஓ. ஆர். டி. எம். ஈ. முதலியன போன்ற வானொலி வானூர்தி உதவி என்பனவற்றிலும் குறைந்தது 4 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்; அல்லது

விமானத் தொடர்பு உபகரணத்திலும் வி. ஓ. ஆர்., டி. எம். ஈ. வளிமண்டல றடார் போன்ற சகல விமான வானொலி வானூர்தி உபகரணங்களைப் பழுதுபார்த்தலிலும் முழுத்தேர்வாய்விலும் குறைந்தது 3 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ், (மு. கு.: சமயநீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பள்ளிக் கூடங்களுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.)

(ஆ) மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள்.

(இ) நல்லொழுக்கச் சான்றிதழ்கள் இரண்டு, இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழிற் சான்றிதழ் அல்லது தொழில்நுட்பத் தகைமைகள் அல்லது அவ்விரண்டும்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்கள்.

குறிப்பு.—(1) பத்திரங்களேயாயினும் பத்திரங்களின் படிகளேயாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படலாகாது.

(2) பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களது விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவை அல்லது கூட்டுத் தாபனங்களின் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் தலைவருக் கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் தேதியன்று அல்லது அதற்கு முன் போக்குவரத்து அமைச்சின் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகளையும் செயலாளர், போக்குவரத்து அமைச்சு என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத் திணைக்களத்திலுள்ள எவ்வுத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் முதலாம் பாகம், இரண்டாம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்கவும்.

9. விண்ணப்பம் பெற்றுக் கொண்டமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்கு விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைக் கிடைக்கப் பெறுதோர் போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு உடனே அறிவித்தல் வேண்டும். இவ்வேற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பதாரர் விண்ணப்பம் தொடர்பான கோரிக்கையெதனையும் இழந்தவராவர்.

வி. ரீ. நவரத்ன,
பதில் செயலாளர்,
போக்குவரத்து அமைச்சு.

போக்குவரத்து அமைச்சின் காரியாலயம்,
செயலகம்,
கொழும்பு-1.
1973 ஏப்பிரல் 11 ஆந் தேதி.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

போக்குவரத்து அமைச்சு

சிவில் வான்செலவுத் திணைக்களம்

உதவி வானூர்திப் பரிசோதகர் பதவி—தரம் I (வானொலி)

1. முழுப் பெயர் (தனித்தனி எழுத்தில்) :————.

2. அஞ்சல் முகவரி :————.
(முகவரியில் மாற்றம் ஏதும் ஏற்படின் உடனே அறிவிக்கப்படல் வேண்டும்)

3. (அ) பிறந்த தேதி :
வருடம் ———— மாதங்கள் ———— தேதி ————.
(ஆ) 1973 யூன் மாதம் 30 ஆந் தேதியன்று சரியான வயது : ————.
வருடம் ———— மாதங்கள் ———— தேதி ————.

4. தாங்கள் இலங்கைப் பிரஜையா? வம்சாவழி காரணமாகவா அல்லது பதிவு காரணமாகவா என்பதனைக் குறிப்பிடவும். பதிவு காரணமாக இலங்கையராயின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் தேதியையும் குறிப்பிடுக : ————.

5. பிறந்த இடம் :
(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) விண்ணப்பதாரரின் தகப்பனர் :————.
(இ) விண்ணப்பதாரரின் தகப்பன் வழிப் பாட்டன் :————
(ஈ) விண்ணப்பதாரரின் தகப்பன் வழிப் பூட்டன் :————.
விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு ஒன்றில் (ஆ) வையும் (இ) யையும் அல்லது (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும்.

6. (அ) பால் :————.
(ஆ) விண்ணப்பதாரர் விவாகமானவரா? தனியாளரா? தாரமிழந்வரா? அல்லது கைம்பெண்ணா? :————.

7. பின்வருவனவற்றில் சித்தியடைந்த உயர்ந்த பரீட்சை :
(1) சிங்களம் :————.
(2) தமிழ் :————.
(3) ஆங்கிலம் :————.

8. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள், கல்லூரிகள், மற்றும் தாபனங்களின் பெயர்கள் :

| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |

9. ஏதாவது விளையாட்டுத் துறையின் விபரங்கள், பெற்றுக் கொண்ட தனிச்சிறப்புக்கள், அத்துறையில் வகித்த முக்கிய பதவிகள் :————.

10. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா? இல்லையாயின் எவ்வளவுக்கு கடனாளியாய் இருக்கின்றீர்? :————.

11. ஒரு நீதி மன்றத்தில் ஏதேனும் கிரிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா? உண்டெனில் அவ் வழக்கின் திகதியையும் இலக்கத்தையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக :————.

12. கல்லூரிப் பரீட்சை, உயர் தொழில், தொழினுட்பத் தகைமைகள் :————.

(பெற்றுக் கொண்ட பட்டங்கள், தனிச்சிறப்புக்கள், உயர் தொழில் அல்லது தொழினுட்பம் அல்லது இவ்விரண்டினதும் தகைமைகள் போன்றவற்றினை விபரங்கள், திகதி, கிடைக்கப் பெற்ற வகுப்பு, எடுத்துக் கொண்ட பாடங்கள், தாபனங்களின் பெயர்கள் என்பனவற்றுடன் தருக.

13. தற்போதைய தொழிலும் முன்னைய நியமனங்களும் உண்டெனில் :————.

(தொடங்கிய, விட்ட தேதியினையும் கடைசியாகப் பெற்றுக் கொண்ட வருடாந்தச் சம்பளத்தினையும் குறிப்பிடுக) :

முக்கியம்.—அரசாங்கத்தின் கீழ் சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை கீழே உள்ள 15 ஆம் கூட்டில் குறிப்பிடுக.

14. விசேட தகைமைகள்.—(அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் இவையிரண்டும் உமக்குண்டா? உண்டெனில், அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக) :————.

வர்த்தமானி அறிவித்தலில் விசேட தேவைகள் ஏதாவது குறிப்பிடப்பட்டுள்ளதெனில் அவற்றைக் கவனிக்கவும்.

15. மேலும் விபரங்கள் ஏதாவது :————.

16. விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்கள் எதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவையெனக் காணின் தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் அச்செம்மையின்மை கண்டு பிடிக்கப்படின் எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்திற்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

அபேட்சகர் அரசாங்க சேவையிலிருப்பின் திணைக்களத் தலைவரது அறிக்கை :

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :————.

4-616—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57.

---

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**பொது எழுதுநர் சேவையின் அதிசிறப்பு வகுப்புக்குப் பதவியேற்றஞ் செய்வதற்காய மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை**

1973 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 23 ஆந் தேதிய 52 ஆம் இலக்க இலங்கைச் செய்திமடலில் (கசெற்றில்) வெளியிடப்பட்ட மேற்படி பரீட்சை சம்பந்தமான அறிவிப்புத் தொடர்பாக—

(அ) இப் பரீட்சை முன்னர் கூறப்பட்டுள்ளவாறு 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 2 ஆம், 3 ஆம் தேதிகளில் நடாத்தப்படமாட்டாதென்றும் 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆம், 17 ஆம் தேதிகளில் நடாத்தப்படுமென்றும்,

(ஆ) அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பரீட்சை ஆணையாளரிடமிருந்து 1973 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் தேதி வரை பெற்றுக்கொள்ளலாமென்றும்,

(இ) விண்ணப்ப முடிவுத் தேதி 1973 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 23 ஆந் தேதியிலிருந்து 1973 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆந் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளதென்றும்,

(ஈ) பொது எழுதுநர் சேவையின் அதிசிறப்பு வகுப்புக்கு நியமிக்கப்படுவதற்காக 1972 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்களும், ஆனால் அப் பரீட்சைக்குத் தோற்றுதவர்களுமான பரீட்சார்த்திகளும் இப் பரீட்சைக்கு, விதிக்கப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணமாகிய 50/- ரூபாவைச் செலுத்துவதினின்றும் விலக்களிக்கப்படுமென்றும்

பரீட்சை எடுக்க உத்தேசித்துள்ள பரீட்சார்த்திகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. இப் பரீட்சையைக் கட்டுப்படுத்தும் ஒழுங்கு விதிகள் மேற் குறிப்பிடப்பட்டுள்ள மாறல்களுக்கு அமைவாக, மாற்றமின்றி யிருக்கும்.

பீ. எச். சிறிவர்த்தன,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி
உண்ணாட்டலுவல்கள் அமைச்சின்
பதில் செயலாளரும் பதில் அரசாங்க
நிருவாகப் பணிப்பாளர்
அதிபதியும்.

அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உண்ணாட்டலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 7.
1973, ஏப்பிரல் மாதம் 19 ஆந் தேதி.

4-731—27.04.73 ந திகதிய வர்த்தமானி இல. 57.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய **அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா** என்பதையும் **கவனத்திற் கொள்க.**

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் .. | 6.4.73 | வெள்ளி .. | 28.3.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 11.4.73 | புதன் .. | 4.4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 19.4.73 | வியாழன் .. | 11.4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 27.4.73 | வெள்ளி | 18.4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| மே | 4.5.73 | வெள்ளி .. | 25.4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 11.5.73 | வெள்ளி .. | 2.5.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 18.5.73 | வெள்ளி .. | 9.5.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 25.5.73 | வெள்ளி .. | 15.5.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| யூன் .. | 1.6.73 | வெள்ளி .. | 23.5.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 8.6.73 | வெள்ளி .. | 30.5.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 14.6.73 | வியாழன் .. | 6.6.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 22.6.73 | வெள்ளி .. | 13.6.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 29.6.73 | வெள்ளி .. | 20.6.73 | புதன் .. | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
**1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.